# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண். 361/மா/2025
நாள் 16.12.2025

R. மயில்சாமி
மதுரை --- முறையீட்டு மனுதாரர்

உத வி ஆணையர், மண்டலம் 2 (வடக்கு)
மதுரை மாநகராட்சி, மதுரை --- எதிர் மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண் 5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆர்.மயில்சாமி என்பவரின் 11.12.2023 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 13.12.2023 அன்று பெறப்பட்டு 361/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண் 5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆர்.மயில்சாமி என்பவர் தனது 11.12.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–க்கு உட்பட்ட பீ.பீ.குளம், நேதாஜி மெயின் ரோடு, கதவு எண் 44–ல் இயங்கி வரும் "கருணை" மல்ட்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை கட்டடம் ஐந்து மாடிகளை கொண்ட கட்டடம் ஆகும். இக்கட்டடம் அனுமதிக்கு மாறாகவும் சட்டத்திற்கு புறம்பாக கூடுதல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் "கருணை" மல்ட்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை கட்டடத்திற்கு நான்கு புறமும் இடைவெளி இடம் (Set Back Spaces) விடாமல் சட்ட விதிகளுக்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இம்மருத்துவமனை கட்டடம் ரோட்டில் இருந்து 15 மீட்டர் இடைவெளி விட்டு கட்டடம் கட்டாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இம்மருத்துவமனைக்கு வாகனங்கள் நிறுத்துவதற்கு (Parking Space) இடம் விடாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால், மருத்துவமனைக்கு வரும் உள்நோயாளிகள், புறநோயாளிகள் மற்றும் பார்வையாளர்களின் வாகனங்களை மருத்துவமனை முன்பாக ரோட்டில் நிறுத்துவதனால் வாகனங்கள் போக்குவரத்து நெரிசலில் சிக்கி தவிக்கின்றன. இவ்வழியே செல்லும் பள்ளி, கல்லூரி வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள்.

மேற்படி "கருணை" மருத்துவமனை கட்டடம் பொதுமக்கள் பயன்பாட்டு கட்டடம் என்பதால், வருவாய் துறையினரிடம் இருந்து தமிழ்நாடு பொது கட்டடங்கள் (உரிமம்) சட்டம், 1965 பிரிவு 2(8)–ன்படி உரிமம் பெறாமலும் மற்றும் இதர அரசு துறைகளில் அனுமதி பெறாமல் மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

எனவே "கருணை" மருத்துவமனை கட்டடம் கூடுதலாக அனுமதிக்கு மாறாக கட்டடம் கட்டியும், கட்டடத்திற்கு நான்குபுறமும் இடைவெளி விடாமலும், ரோட்டில் இருந்து 15 மீட்டர் தூரம் இடைவெளி இடம் விடாமலும், வாகனங்கள் நிறுத்துவதற்கு இடம் விடாமல் சட்டவிரோதமாக கட்டப்பட்ட, மருத்துவமனை கட்டடத்தை தமிழ்நாடு அரசாணை எண் 7 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள் 10.01.2023–ன்படியும், நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 21724/2016/BA2 நாள் 03.01.2017–ன் உத்தரவின்படியும் மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971–ன் பிரிவுகள் 56(1) மற்றும் உடன்படிக்கப்பட்ட பிரிவு 85 கீழ் Stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிட்டும் Lock and seal and demolition வழங்கி மற்றும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிக பணிவன்புடனும் தாழ்மையுடனும் வேண்டிக் கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 02.01.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் மதுரை மாநகராட்சி, மண்டலம் 2–ன் உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3. மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளர் தனது 21.02.2024 நாளிட்ட கடிதம் எண்.ம2உ2இ2/005947/2023–ல் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:

"12.01.2024 நாளிட்ட உதவி செயற்பொறியாளர் (திட்டம்)–ன் குறிப்பில், மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு) வார்டு 5–ல் உள்ள கருணை மருத்துவமனை கட்டடத்திற்கு மதுரை மாநகராட்சி மூலம் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும், மேலும், மருத்துவமனை கட்டிடம் கூடுதலாகம் / மாறுதலாகவும் கட்டப்பட்ட கட்டிட அளவுகளுக்கு நிர்வாகம் மூலம் களஆய்வு செய்து, அதற்கான நிர்வாக ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார்.

15.01.2024 நாளிட்ட மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) அலுவலகக் கடிதத்தில் மேற்கண்ட விவரங்களை தெரிவித்து மனுதாரருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 02.01.2024 நாளிட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதின் அடிப்படையில், மனுதாரரின் மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவர அறிக்கையினை இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது என்ற விபரம் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம் நாள்தோறும் ஒவ்வொரு வார்டுகளுக்கு நேரடியாக சென்று பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெறுதல் களப்பணி காரணமாக அறிக்கை அனுப்பி வைப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த ஒருமுறை மன்னிக்குமாறும், இனிவரும் காலங்களில் இவ்வாறு நடைபெறாவண்ணம் மனுக்கள் மீது உடனுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று விவரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 11.11.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 28.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இந்நிலையில் மனுதாரர் தன்னுடைய 06.11.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

(1) முறையீட்டு மனு எண் 361/மா/2025 நாள் 28.10.2025 – கருணை மருத்துவமனை மீது மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் மதுரையில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. வழக்கு எண் W.P. (MD) No.16604/2025.

(2) முறையீட்டு மனு எண் 157/மா/2025 நாள் 28.10.2025 – சிதம்பரம் மருத்துமனை கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளை வழக்கு எண் W.P. (MD) No.15343/2025. வழக்கு தொடர்ந்து வழக்கு நிலுவையில் உள்ளது.

எனவே, மேற்கண்ட இரண்டு முறையீட்டு மனுக்கள் மீதும் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதை தங்களின் கனிவான கவனத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

6. மனுதாரர் 11.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

7. எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி மண்டல 2 (வடக்கு)–ன் இளநிலை பொறியாளர் 11.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''12.01.2024 நாளிட்ட உதவி செயற்பொறியாளர் (திட்டம்)–ன் குறிப்பில், மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு) வார்டு 5–ல் உள்ள கருணை மருத்துவமனை கட்டடத்திற்கு மதுரை மாநகராட்சி மூலம் கட்டிட வரைபட அனுமதி 22.12.2008 மற்றும் 22.06.2010 ஆகிய தேதியில் வழங்கப்பட்டுள்ளது என்றும், மேலும், மருத்துவமனை கட்டிடம் கூடுதலாகவும் / மாறுதலாகவும் கட்டப்பட்ட கட்டிட அளவுகளுக்கு நிர்வாக ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் திரு.ஆர்.மயில்சாமி அவர்கள் மேற்கண்ட கருணை மருத்துவமனை கட்டிடம் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.W.P(MD) No.16604/2025 தொடர்ந்ததில் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளை 19.06.2025 நாளிட்ட இடைக்கால உத்தரவில் மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் உதவி ஆணையர் தற்போதைய நிலைக்குறித்து (Status Report) அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணையிட்டுள்ளது. இது தொடர்பாக கருணை மருத்துவமனை உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (தமிழ்நாடு விதி 35) 2022ல் திருத்தப்பட்டது – பிரிவு 135 (1,2 ) –ன் கீழ் 23.10.2025 நாளிட்ட அறிவிப்பு சார்பு செய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை மதுரை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

8. மனுதாரரின் மனு மற்றும் 06.11.2025 நாளிட்ட கடிதம் மற்றும் மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–க்கு உட்பட்ட பீ.பீ.குளம், நேதாஜி மெயின் ரோடு, கதவு எண் 44–ல் இயங்கி வரும் "கருணை" மல்ட்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டடம் கட்டியும், கட்டடத்திற்கு நான்குபுறமும் இடைவெளி விடாமலும், ரோட்டில் இருந்து 15 மீட்டர் தூரம் இடைவெளி இடம் விடாமலும், வாகனங்கள் நிறுத்துவதற்கு இடம் விடாமல் கட்டப்பட்ட, மருத்துவமனை கட்டடத்தை தமிழ்நாடு அரசாணை எண் 7, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள் 10.01.2023–ன்படியும், நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 21724/2016/BA2, நாள் 03.01.2017–ன் உத்தரவின்படியும் மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971–ன் பிரிவுகள் 56(1) மற்றும் உடன்படிக்கப்பட்ட பிரிவு 85 கீழ் Stop work notice/notice calling for approved plan அறிவிப்பினை அளித்து, அதன் தொடர்ச்சியாக Lock and seal and demolition ஆணை வழங்கி அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு கோரியிருப்பதும், இந்நிலையில் மனுதாரர் மேற்கண்ட கருணை மருத்துவமனையின் மீது மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மதுரை அமர்வில் வழக்கு எண் W.P. (MD) No.16604/2025–ல் தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளதும் மனுதாரரின் மனு மற்றும் கடிதம் வாயிலாக அறிய முடிகிறது.

மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு) வார்டு 5–ல் உள்ள கருணை மருத்துவமனை கட்டடத்திற்கு மதுரை மாநகராட்சி மூலம் கட்டிட வரைபட அனுமதி 22.12.2008 மற்றும் 22.06.2010 ஆகிய தேதிகளில் வழங்கப்பட்டது என்பதும், மருத்துவமனை கட்டிடம் கூடுதலாகவும் / மாறுதலாகவும் கட்டப்பட்ட கட்டிட அளவுகளுக்கு நிர்வாக ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும், மனுதாரர் திரு.ஆர்.மயில்சாமி மேற்கண்ட கருணை மருத்துவமனை கட்டிடம் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மதுரை அமர்வில் வழக்கு எண் W.P(MD) No.16604/2025 தொடர்ந்ததில் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மதுரை அமர்வு 19.06.2025 நாளிட்ட இடைக்கால உத்தரவில் மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் உதவி ஆணையர் தற்போதைய நிலைக்குறித்து (Status Report) அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணையிட்டுள்ளது என்பதும், இதன் தொடர்பாக கருணை மருத்துவமனை உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (தமிழ்நாடு சட்டம் 35/2022ல் திருத்தப்பட்டது) – பிரிவு 135 (1), (2 )–ன் கீழ் 23.10.2025 நாளிட்ட அறிவிப்பு சார்பு செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை மதுரை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் என்பதும் மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு)ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நிலையில், 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு

எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:–

"Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014,
Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,--

(a) xxx xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

(c) xxx xxx"

எனவே, மனுதாரரின் புகார் தொடர்பாக நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி, மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல்நடவடிக்கை எடுக்க இயலாது என்று முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் டிசம்பர் 16–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. R. மயில்சாமி,
பிளாட் 5, அய்யப்பன் தெரு,செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை–625 018.

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி, மதுரை.

(3) உதவி ஆணையர்,
மண்டலம் 2 (வடக்கு), மதுரை மாநகராட்சி, மதுரை.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்

2/10